ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No C.C.No. 1/2023 LW- 8 PW- 7

Name : பொன்ராஜ் ( மருத்துவர்)

Father's/Husband's Name : ராமு

Village : உதவி இருதய சிகிச்சை நிபுணர்

Taluk : ராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை

District : ராமநாதபுரம்

Age : 42/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026

1 முதல் 7 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**(சாட்சிக்கு காணொளி காட்சி வாயிலாக சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது ராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி இருதய சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.09.2019ம் தேதி மதியம் 3.10 மணியளவில் துவராபதியைச் சேர்ந்த தங்கராஜ் என்பவரது மகன் 22 வயது மதிக்கத்தக்க தங்கப்பாண்டி என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 10 நபர்கள் அவருடைய வீட்டில் வைத்து தாக்கியதாக தெரிவித்தார். அவர் உடம்பு முழுவதும் வலி இருப்பதாக தெரிவித்தார். அவருக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சான்று வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் காயச் சான்று நான் வழங்கியதுதான். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காய கருத்துரை அ.த.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 10 நபர்கள் சேர்ந்து ஒரு நபரை அடிக்கும்போது நான் சொல்லக்கூடிய வலியுடன் கூடிய

காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.</u>**

2. எனது அறிக்கையில் தங்கப்பாண்டி என்பவருக்கு வலது கை மற்றும் முதுகில் காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. எனது பதிவேட்டில் தங்கப்பாண்டி என்பவருக்கு காயங்கள் எதுவும் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தங்கப்பாண்டி என்பவர் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டாரா என்றால் இல்லை, வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார். தங்கப்பாண்டி என்பவரை மருத்துவமனைக்கு யாரேனும் அழைத்து வந்தார்களா என்றால் இல்லை, அவராகவே வந்தார். போலீசார் மெமோ குறித்து எனது அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவமானது 10.30 மணியளவில் நடந்ததாக விபத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. தங்கப்பாண்டி என்பவருக்கு சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதால் அவரது காயத்தின் தன்மை உதாரணமாக கன்றிப் போனதா, வீக்கக் காயமா என்பது குறித்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் வெளிப்புறக் காயங்கள் இல்லை என்பதால் அதைக் குறிப்பிடவில்லை. பொதுவாக ஒரு நபர் கீழே விழுந்தால் நான் சொல்லும் வலி ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான். காவல்துறையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க விபத்து பதிவேடு தயார் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

Co-Ordinater @ Court Point

(Sathishmani, Reader)

Co-Ordinater @ Remote Point

Witness

மேற்படி சாட்சியத்தை, காணொளி காட்சி வாயிலாக சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சாட்சி மற்றும் இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு நேரடியாக Share Option மூலமாக சரிபார்க்க பதிவு செய்யப்பட்டது. அதனை சாட்சிக்கு ஈ–மெயில் மூலமாக படித்துப்பார்க்க அனுப்பப்பட்டு, அவர் சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்து நீதிமன்றத்திற்கு மீண்டும் ஈ–மெயில் மூலமாக அனுப்பி வைத்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.12 18:35:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்